**தலைப்பு 199 – ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 199 – ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 சனவரி 11 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 41.41 மில்லியனாக இருந்ததுடன், இதில் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 32.13 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 9.28 மில்லியன் அதாவது 22.41 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 28.36 | 20.87 | 7.49 | 26.41 |
| மூலதனம் | 13.05 | 11.26 | 1.79 | 13.72 |
| மொத்தம் | 41.41 | 32.13 | 9.28 | 22.41 |

2.2 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 19901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 3,500,000 | 0.00 | 20,000 | 21,787 | 35,000,000 | 1,114,800 |

2.3 **கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் கீழுள்ள 7002/0000/00/0451/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 2.47 மில்லியன் ஆகும்.

2.4 **பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழுள்ள 6000/0000/00/0018/0024/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 340,000 ஆகும்.

2.5 **கணக்காய்வு அவதானிப்பு**

ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆரம்பக் கைத்தொழில் அமைச்சினால் மீளாய்வாண்டில் தலைப்பு 199 இற்குரிய ஒதுக்கீட்டுக் கணக்கு 2016 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது 09 மாத தாமதத்தின் பின்னர் 2016 நவம்பர் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) ஆரம்பக் கைத்தொழில் அமைச்சினால் மீளாய்வாண்டிற்குரிய விடய இலக்கம் 19901 இன் கீழ் வரும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது 2016 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | ஒதுக்கீட்டு (அங்கீகரிக்கப்பட்ட) செலவினப் பேரேடு | நிதிப்பிரமாணம் 447 |
| (iii) | வாகன நிரற்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(ஊ) |
| (iv) | நட்டம் மற்றும் இழப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 08 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,245,000 நிதி ஏற்பாட்டிலிருந்து மீளாய்வாண்டின் போது எவ்வித பயன்பாட்டிற்கும் வழங்கப்படாமையினால் அந்த நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 19 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 08 சதவீதம் முதல் 29 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.4 இணங்காமைகள்

2006 பெப்ரவரி 21 ஆந் திகதிய CSA/2/3/4 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை உயர் ஸ்தானிகராலயம் அல்லது வெளிநாட்டு அரசாங்கத்தின் அமைச்சுடன் நேரடியாக தொடர்பினை பேணி உத்தியோகபூர்வ அல்லது உத்தியோகபூர்வமற்ற சுற்றுலாக்களில் ஈடுபட முடியாதிருந்தமையும், தனிப்பட்ட ரீதியில் கிடைக்கின்ற அழைப்புக்களுக்காக வெளிவிவகார அமைச்சிற்கு அனுப்பி அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அமைச்சின் உத்தியோகத்தர்களினால் தனிப்பட்ட ரீதியில் இணையதளம் ஊடாகவும், தூதுவராலயங்களினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு சுற்றுலாவிற்காகவும் 03 சந்தர்ப்பங்களில் அமைச்சர், அமைச்சரின் பதவியணியினர் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்றிருந்தனர். மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 2,271,961 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

#### உள்ளகக் கணக்காய்வு

அமைச்சிற்காக உள்ளககக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்ததுடன் விவசாய ஏற்றுமதித் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வாளரினால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், போதியளவான பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.6 நட்டமும் இழப்பும்

அமைச்சிற்குச் சொந்தமான கெப் வண்டியொன்று 2015 நவம்பர் 21 ஆந் திகதி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய பூச்சாடியொன்றில் மோதுண்டு ஏற்பட்ட விபத்தில் ரூபா 1,271,090 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சரியான தகவல்கள் வெளிப்படுத்தப்படாமையின் காரணமாக காப்புறுதி இழப்பீட்டைப் பெற முடியாதிருந்தது. எனினும் வண்டியைச் செலுத்திய சாரதிக்கான ஒழுக்காற்று விசாரணை 2016 திசெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. நிதிப் பிரமாணம் 104(3) இன் பிரகாரம் மேற்கூறப்பட்ட நட்டம் தொடர்பாக சமர்ப்பிக்கவேண்டிய பூர்வாங்க அறிக்கை உரியவாறு பூரணப்படுத்தி அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ஏற்பட்ட விபத்து தொடர்பாக நட்டம் மற்றும் இழப்பும் பதிவேட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.7 முகாமைத்துவ நலிவுகள்

சில மூலங்கள் மாத்திரம் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே வரையறுக்கப்பட்ட கூறுவிலை நடைமுறை தெரிவுசெய்யப்பட வேண்டியது தொடர்பாக அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அமைச்சிற்காக ரூபா 1,872,601 தொகையான வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது 04 கேள்விதாரர்களிடமிருந்து மாத்திரம் கேள்விகள் கோரப்பட்டிருந்தன.

## 3.8 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 08 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 22 | 21 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 39 | 23 | 16 |
| | மொத்தம் | 76 | 52 | 24 |